# தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபை

# பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபையின் கீழ் தரப்பட்டுள்ள பதவிகளுக்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிகள் நிரந்தரமான, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரிமை பெற்ற பதவிகளாகும். தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபை கொழும்பில் மாத்திரம் அமைந்திருப்பதோடு வேறு கிளை அலுவலகங்கள் இல்லை என்பதால் இடமாற்றங்கள் அற்றதாகும்.

## 1. பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) – (வெற்றிடங்கள் 01)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்

**அத்துடன்**

மனித வள முகாமைத்துவம்/ அரச நிர்வாகம்/ அரச முகாமைத்துவம்/ வர்த்தக துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை (Masters) பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரத்திலான" பதவி ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்:- (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ சேவை (MM) சேவை மட்டத்தில் Iஆவது தரத்திலான பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் குறித்த துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:** 35 வயதுக்கு குறையாத 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**பதவிக்கு தொடர்புடைய சம்பளப் படி:** முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைய HM 1-1 ரூபா (140,640 - 15x4,100 - 202,140) சம்பள அளவின் 2026.01.01 திகதிக்கு குறித்த சம்பளப் படியான 123,019/- மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**ஆட்சேர்ப்பு முறை:** நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வகையில் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவு அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கல் கீழ் தரப்பட்டவாறு அமையும்.

| | |
|---|---|
| குறித்த அனுபவம் | – புள்ளி 30 |
| குறித்த மேலதிக கல்வி/ தொழில்முறை தகைமை | – புள்ளி 30 |
| ஏனைய செயல்திறன் மற்றும் திறமைகள் | – புள்ளி 15 |
| நேர்முகப்பரீட்சையில் செயல்திறன் | – புள்ளி 25 |
| **மொத்த புள்ளிகள்** | **100** |

## 2. உயிர் மருத்துவ பொறியியலாளர்

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் (இயந்திரவியல்/ மின்)/ உயிர் மருத்துவ பொறியியல் அல்லது பதவிக்கு தொடர்புடைய துறையில் வேறு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**மற்றும்**

தகுதியைப் பெற்ற பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் ஓர் (01) ஆண்டு சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**பதவிக்கு தொடர்புடைய சம்பளப் படி:** முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைய MM 1-1 ரூபா (91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240) சம்பள அளவின் 2026.01.01 திகதிக்கு குறித்த சம்பளப் படியான 81,710/- மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**ஆட்சேர்ப்பு முறை:** திறந்த போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவு அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கல் கீழ் தரப்பட்டவாறு அமையும்.

| | |
|---|---|
| குறித்த அனுபவம் | – புள்ளி 30 |
| குறித்த மேலதிக கல்வி தகைமை | – புள்ளி 30 |
| ஏனைய திறமைகள்/ செயல்திறன் | – புள்ளி 15 |
| நேர்முகப்பரீட்சையில் காண்பிக்கும் திறமை | – புள்ளி 25 |
| **மொத்த புள்ளிகள்** | **100** |

## 3. உதவி மருந்து மதிப்பீட்டு அதிகாரி – (வெற்றிடங்கள் 02)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2 தகைமை)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர் அல்லது B.Sc மருந்தாளர் (Bachelor of Pharmacy/ Bachelor of Science (Pharmacy)) ஆரம்பப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

மருந்தாளராக இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல்.

மூன்றாம் நிலைக்கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்ககப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) ஆறாவது (06) தரத்திற்கு குறையாத தரத்தில் மருந்தாளர் உயர் டிப்ளோமா சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்

**மற்றும்**

தகைமையை பெற்ற பின்னர் அரச, அரச கூட்டுத்தாபன, சபை, சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் குறைந்தது மருந்து ஒழுங்கடுத்தல் துறையில் ஐந்து (05) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

மருந்தாளராக இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**பதவிக்கு தொடர்புடைய சம்பளப் படி:** முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைய துஆ 1-1 ரூபா (72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970) சம்பள அளவின் 2026.01.01 திகதிக்கு குறித்த சம்பளப் படியான 65,633/- மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**ஆட்சேர்ப்பு முறை:** எழுத்து போட்டிப் பரீட்சை மற்றும்.'. அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவு அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கல் கீழ் தரப்பட்டவாறு அமையும்.

| | |
|---|---|
| குறித்த மேலதிக அனுபவம் | – புள்ளி 30 |
| குறித்த மேலதிக தகைமை | – புள்ளி 30 |
| ஏனைய திறமைகள் மற்றும் செயல்திறன் | – புள்ளி 15 |
| நேர்முகப்பரீட்சையில் காண்பிக்கும் திறமை | – புள்ளி 25 |
| **மொத்த புள்ளிகள்** | **100** |

## 4. அபிவிருத்தி அதிகாரி – (வெற்றிடங்கள் 01 )

**கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம்/ மனித வளம்/ தகவல் தொழில்நுட்பம்/ நிதி/ கணக்கியல் அல்லது பதவிக்கு தொடர்புடைய துறையில் வேறு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**வயது:** 22 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**பதவிக்கு தொடர்புடைய சம்பளப் படி:** முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைய MA 3-2025 ரூபா (53,940 - 10x800 - 11 x 1,190 - 10 x 1,320 - 5 x 1,350 - 94,980) சம்பள அளவின் 2026.01.01 திகதிக்கு குறித்த சம்பளப் படியான 49,831/- மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**ஆட்சேர்ப்பு முறை:** பதவிக்கு தொடர்புடையவாறு எழுத்து போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவு அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கல் கீழ் தரப்பட்டவாறு அமையும்.

| | |
|---|---|
| குறித்த அனுபவம் | – புள்ளி 30 |
| குறித்த மேலதிக தகைமை | – புள்ளி 30 |
| ஏனைய செயல்திறன்/ திறமை | – புள்ளி 15 |
| நேர்முகப்பரீட்சையில் காண்பிக்கும் திறமை | – புள்ளி 25 |
| **மொத்த புள்ளிகள்** | **100** |

**வேறு விடயங்கள்:**

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

- அரச, அரச சார்பு நிறுவனங்களில் கடமை புரியும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவன தலைவரின் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2026.02.14 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன் கிடைக்குமாறு தலைமை நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபை, அரச பொறியியல் கூட்டுத்தாபன கட்டிடம், 02 ஆவது மாடி, இலக்கம் 130, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தபாலில் அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபை.**

## தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபை

## ............. பதவிக்கான விண்ணப்பம்

1. தனிப்பட்ட விபரங்கள்
    1.1 முழுப் பெயர்:-
    1.2 முதல் எழுத்துகளுடன் பெயர்:-
    1.3 ஆண்/ பெண் தன்மை:-
    1.4 பிறந்த திகதி:-
    1.5 வயது:- ஆண்டு:......... மாதம்:.................... திகதி:.......................
    1.6 தேசிய அடையாள அட்டை இலக்கம்:-
    1.7 தொலைபேசி இலக்கம்:- நிரந்தரமானது:.................. கைபேசி:...............
    1.8 மின்னஞ்சல் முகவரி
    1.9 முகவரி:-
    1.10 பதிவு மாவட்டம்:-
2. பரீட்சைக்கு தோன்று ஊடகம்:-
3. கல்வித் தகைமை: (உச்ச தகைமையில் இருந்து வரிசைப்படி குறிப்பிடவும்)

| வரிசை இலக்கம் | தகைமைகள் | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்ட திகதி/ செல்லுபடி திகதி | பாடம்/ சித்தி |
|---|---|---|---|---|
| 01 | | | | |
| 02 | | | | |

4. தொழில் தகைமை

| வரிசை இலக்கம் | தகைமைகள் | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்ட திகதி/ செல்லுபடி திகதி | பாடம்/ சித்தி |
|---|---|---|---|---|
| 01 | | | | |
| 02 | | | | |

5. அனுபவம்: (தற்போது வகிக்கும் பதவி தொடக்கம் வரிசைப்படி குறிப்பிடவும்)

| வரிசை இலக்கம் | பதவி | நிறுவனம் | காலம் |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |

6. விண்ணப்பதாரர்கள் தொடர்பில் விபரங்களை கேட்டறிய முடியுமான உறவினர் அல்லாத இருவரின் பெயர், தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரி:
7. விண்ணப்பதாரரின் சான்றிதழ்:

    இங்கு மேற் குறிப்பிடப்பட்டிருக்கும் என்னை பற்றிய விபரங்களை எனது அறிவு, நம்பிக்கைக்கு அமைய சரியானது மற்றும் உண்மையானது என அறிவிக்கிறேன்.

    திகதி: ..............................

    **(விண்ணப்பதாரரின் கையொப்பம்)**

8. அரச, அரச சார்பு நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரராயின் நிறுவன தலைவரின் சான்றிதழ்:

    இந்த விண்ணப்பதாரராகிய ................ அவர்கள் தற்போது இந்த நிறுவனத்தில் ........................ ஆக நிரந்தர/ தற்காலிக/ அமைய பணியாளராக பணியாற்றுகிறார் என்றும், அவர் இந்தப் பதவிக்காக தேர்வு செய்யப்பட்டால் கடமையில் இருந்து விடுவிக்க முடியும் எனவும் அறியத்தருகிறேன்.

    ........................................

    **நிறுவன தலைவரின் கையொப்பம்**
    **(உத்தியோகபூர்வ முத்திரை)**

**கருத்தில் கொள்ளல் வேண்டும்:-**

**குறித்த மாதிரிக்கு அமைய மாத்திரம் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும் என்பதோடு உங்களின் கல்வி மற்றும் தொழில் தகைமையை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும். இந்த மாதிரிக்கு அமைய பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், முழுமை பெறாத விண்ணப்பங்கள், குறித்த சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்காத விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்பத்தை ஏற்கும் திகதிக்கு தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படக்கூடும்.**